

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினைந்தாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 24 MAR 2020)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினைந்தாவது அறிக்கை

"தகவல் தொழில்நுட்பவியல்" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதின்மூன்றாவது பேரவை) பேரவைக்கு அளித்த பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	iii
I. முன்னுரை	...	v
II. அறிக்கை	...	vii
III. இணைப்புகள்		
இணைப்பு – 1	நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை	1–2
இணைப்பு – 2	துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவை	3–6
இணைப்பு – 3	குழு மேலும் தொடர விரும்புபவை	7–9

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன்	. .	செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள்	. .	இணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன்	. .	துணைச் செயலாளர்

I. முன்னுரை

"தகவல் தொழில்நுட்பவியல்" குறித்து 2006–2007–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) 4.5.2007–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த பதினைந்தாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான பதினைந்தாவது அறிக்கையை குழு 2018–2020 (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழு 19.3.2020–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

"தகவல் தொழில்நுட்பவியல்" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதின்மூன்றாவது பேரவை) பேரவைக்கு அளித்த பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

******

1. 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதின்மூன்றாவது பேரவை) பேரவைக்கு அளித்த பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள 10 பரிந்துரைகளில் 2 பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெறுகின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

5 பரிந்துரைகள் குறித்து அரசு அளித்துள்ள பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

3 பரிந்துரைகள் மீது அரசு மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. இணைப்புகள்

இணைப்பு – 1

நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	1	11	சர்வதேசத் தரத்தில் சென்னையில் அமைத்திடவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர் தனிக் கல்வி மையம் என்ற நிறுவனத்தை விரைவில் தொடங்கிட உரிய அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள குழு பரிந்துரைக்கிறது.	இந்திய தகவல் தொழில்நுட்ப வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிறுவனம், காஞ்சிபுரம் (IIITDM, Kancheepuram) என்பது தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சிறந்த மையமாகும். இது 2007 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் நிறுவப்பட்டது. இது மெட்ராஸ் இந்திய தொழில்நுட்பக்கழகத்தின் (IITM) வழிகாட்டுதலுடன் இந்த வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வந்தது. இந்த நிறுவனம், 2011–இல் சென்னைக்கு அருகிலுள்ள கேளம்பாக்கம்–வண்டலூர் சாலையில் 51 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிரந்தர வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இது அனைத்து மாணவர்களும் வசிக்கும் ஒரு முழு குடியிருப்பு வளாகமாகத் திகழ்கிறது. இந்த நிறுவனம் தகவல் தொழில்நுட்பத்துடன் பொறியியல் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் நிர்வாகத்தை ஒருங்கிணைக்கும் கல்வி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை வழங்குகிறது. இந்த நிறுவனம் பொறியியல் துறைகளில் தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இளங்கலை மற்றும் முதுகலைத் திட்டங்களை வழங்குகிறது. இந்த நிறுவனம் தற்போது பி.டெக் துறைகளில் கம்ப்யூட்டர் இன்ஜினியரிங், எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் (வடிவமைப்பு மற்றும் உற்பத்தி) மற்றும் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் (வடிவமைப்பு மற்றும் உற்பத்தி), 5 இரட்டை பட்டப்படிப்புகளுக்கு வழிவகுக்கும் பி.டெக் மற்றும் எம்.டெக் டிகிரி, எம்.டெஸ், எல்க்ட்ரானிக் சிஸ்டம்ஸ் டிசைன், கம்யூனிகேஷன் சிஸ்டம்ஸ் டிசைன், மெக்கானிக்கல் சிஸ்டம்ஸ் டிசைன் மற்றும் பல்துறை பிஹெச்.டி திட்டங்களை கோர் மற்றும் செயல்முறைப் பகுதி பொறியியல் ஆகியவற்றில் வழங்கி வருகிறது. 2016–ஆம் கல்வியாண்டிலிருந்து, இந்நிறுவனம் பி.டெக் மெக்கானிக்கல் (ஸ்மார்ட் உற்பத்தி) –2 அறிமுகப்படுத்தியது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

இந்த நிறுவனத்தின் ஆசிரிய உறுப்பினர்கள் புகழ்பெற்ற தொழிற்துறைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் நிதியுதவி மற்றும் ஆலோசனை ஆராய்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

(தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013–7, நாள் 2.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2	3	65	ஒசூரில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கும் பணியை விரைவுபடுத்தி செயலாக்கத்தில் கொண்டுவர துறைக்குக் குழு பரிந்துரை செய்கிறது.	ஒசூர் விஸ்வநாதபுரத்தில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.41.75 கோடி முதலீட்டில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் எல்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக கூடுதல் உட்கட்டமைப்புப் பணிகள் தற்போது ரூ.2.56 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் எல்காட் நிறுவனம் 15 ஏக்கர் நிலத்தை 3 நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 62,100 சதுர அடி பரப்பளவு கொண்ட தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் 45,661 சதுர அடி இடம் 4 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் உள்கட்டமைப்பு வேலைகளைத் தொடங்கியுள்ளன. இப்பணிகள் முடிவுற்றவுடன் பயன்பாட்டிற்கு வரவுள்ளன. (தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013–7, நாள் 2.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	4	86	எல்காட் நிறுவனம், வேலூர் மாவட்ட நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து வேலூரில் ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் குழு பரிந்துரைத்துள்ளது.	அரசின் ஆணைப்படி வேலூரில் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு திருவாளர்கள் ITCOT Consultancy and Services Limited, Chennai நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் பேரில் திருவாளர்கள் ITCOT Consultancy and Services Limited, Chennai ஒரு சிறப்புக் கூறுகள் அறிக்கையினை அளித்தனர். இதில் வேலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று பரிந்துரைத்துள்ளனர். இவ்வறிக்கையினை எல்காட் நிறுவனம் அரசின் மேற்படி நடவடிக்கைக்கு அனுப்பியுள்ளது. (தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013–7, நாள் 2.8.2019)	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப் படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	6	102	அரசுச் செயலாளர் தகவல் தொழில்நுட்பத் துறைக்குத் தெரிவித்தபடி Software Technology Park of India Act–ஐ 2009–ஆம் ஆண்டுக்குப் பிறகும் நீட்டிக்க அரசு உரிய நடவடிக்கையை எடுக்கக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இந்திய அரசு, இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (STPI) பிரிவுகளுக்கான ஊக்கத் திட்டங்களை மார்ச் 2011 வரை நீட்டித்தது. மேலும் நீட்டிக்க வேண்டாம் என்று இந்திய அரசாங்கம் கொள்கை முடிவு செய்துள்ளது. (தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013–7, நாள் 2.8.2019)	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	7	108	தமிழகத்தில் உள்ள உள்கட்டமைப்பு, தகவல் தொடர்பு வசதி மற்றும் மிகச் சிறந்த மனித வள ஆற்றல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு பன்னாட்டு வன்பொருள், மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்கள் தங்களுடைய தொழிலைத் தமிழகத்தில் அமைத்து வருகின்றன. இவ்வாறு பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்கும்போது தமிழகத்தில் உள்ள தகுதியுள்ள பட்டதாரிகளுக்கு, அந்நிறுவனங்களில் குறிப்பிட்ட சதவீதத்தில் வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் எனக் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			பன்னாட்டு நிறுவனங்கள், தமிழகத்தில் தொடங்கியுள்ள தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பினை அளிக்கும் பொருட்டு தமக்கென்று விதிமுறைகளை வரையறுத்துள்ளன. மேலும், இந்நிறுவனங்கள் அரசுடைமை அல்லாத தனியார் நிறுவனங்களாகும். எனவே, தமிழகத்திலுள்ள தகுதியுள்ள பட்டதாரிகளுக்கு இந்நிறுவனங்களில் குறிப்பிட்ட சதவீதத்தில் வேலை வாய்ப்பினை வழங்கிட எந்த வித விதிமுறைகளும் வரையறுக்கப்படவில்லை.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.
			(தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ-3)/2013-7, நாள் 2.8.2019)	

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	8	119	பெங்களூருக்கு அருகிலேயே கிருஷ்ணகிரி இருப்பதாலும், அங்கு போதுமான நிலங்கள் இருப்பதாலும் கிருஷ்ணகிரியில் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டும் என துறைக்குக் குழு பரிந்துரைக்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	தமிழ்நாடு மின்னணு நிறுவனம் விஸ்வநாதபுரம் கிராமம், ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்துள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, 50,000 சதுரடி கொண்ட ஒரு தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தையும் கட்டி முடித்துள்ளது. இதில் 3 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் திருவாளர்கள் யூஎஸ் டெக்னாலஜி இண்டர்நேஷனல் பி.லிட் நிறுவனம் தங்களுடைய பணிகளை துவங்கும் தருவாயில் உள்ளது. இதில் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் மீதமுள்ள நில ஒதுக்கீடு பணிகள் நடைபெற்று வருகிறது.	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப்பெறலாம்.
	(தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ-3)/2013, நாள் 22.11.2019)	

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	9	120	மதுராந்தகம் – தொழுப்பேடு அருகே அரசாங்க நிலங்கள் அதிகமான அளவில் உள்ளன. எனவே, அப்பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதால் துறை இங்கு ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மதுராந்தகம்–தொழுப்பேடு இடத்தைப் பொறுத்தவரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் கருத்துரு எல்காட் நிறுவனத்தின் பரிசீலனையில் இல்லை. (தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013, நாள் 22.11.2019)	துறையின் பதில் ஏற்றுக் கொள்ளப் பெறலாம்.

இணைப்பு – 3

மேலும் தொடர விரும்பும் பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	2	48	பாட்னி கம்யூட்டர்ஸ் அமைந்துள்ள சாலையிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலைக்கு அணுகு சாலை மிகவும் அவசியமானது என்று குழு கருதுகிறது. துறை இதில் தனிக் கவனம் செலுத்தி இப்பணியை விரைந்து செயலாக்கத்திற்குக் கொண்டுவரும்படி பரிந்துரைக்கிறது.	முதற்கட்டமாக மத்திய கைலாசத்திலிருந்து சோழிங்கநல்லூர் சந்திப்பு வரை சாலை அமைக்கும் பணி தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகம் (TNRDC) மூலமாக முடிவடைந்து சாலை பராமரிப்புப் பணிகள் (TNRDC) மூலமாக நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக சோழிங்கநல்லூர் சந்திப்பிலிருந்து மாமல்லபுரம் வரை சாலை விரிவுக்கான நிலம் கையகப்படுத்தும் பணி அரசு மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் 110 அறிவிப்பின்படி டைடல்–பார்க் நிறுவனத்திலிருந்து மாமல்லபுரம் வரையிலான மேம்பால உயர் சாலை அமைக்கத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. (தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013–7, நாள் 2.8.2019)	குழுவால் கண்டறியப்பட்ட அணுகு சாலையினை அமைப்பதற்கான பணிகள் அனைத்தும் முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என துறை விரிவாக தெரிவிக்க வேண்டும் என்று குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	5	90	செங்கத்தில் உள்ள மத்திய விவசாயப் பண்ணை நிலத்தை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து எல்காட்டிற்கு நிலமாற்றம் செய்து, தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அரசு தகவல் தொழில்நுட்பத் துறைக்குக் குழு பரிந்துரைக்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இந்த நிலம் மாற்றித் தரப்பட்டால் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அங்கு அமைக்க அனைத்து முயற்சிகளையும் எல்காட் மேற்கொள்ளும் என எல்காட்டின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்தார். எனவே, மேற்கூறிய இடத்தைப் பொறுத்தவரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் கருத்துரு எல்காட் நிறுவனத்தின் பரிசீலனையில் இல்லை. இதற்கான நடவடிக்கையினை அரசு எடுக்கும் பட்சத்தில், சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளது. (தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ-3)/2013-7, நாள் 2.8.2019)	துறை குழுவின் பரிந்துரையின் படி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையினை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதே குழுவின் கருத்து. துறையால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து நிலம் மாற்றம் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை ஓர் அறிக்கையாக குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என, குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	10	122	திருவண்ணாமலையில் கனந்தம்பூண்டி என்ற இடத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி துறைக்குக் குழு பரிந்துரைக்கிறது.

துறையின் பதில்
(5)

திருவண்ணாமலை கனந்தம்பூண்டி என்ற இடத்தில் அரசு புறம்போக்கு நிலம் சுமார் 40 ஏக்கர் உள்ளது. அந்த இடத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு உரிய சாத்தியக்கூறுகள் உள்ளன. மாவட்ட ஆட்சியரும் அந்த நிலத்தை இப்பணிக்கென ஒதுக்கீடு செய்யத் தயாராக உள்ளார்.

இக்குழுக் கூட்டத்தில் இந்த நிலம் மாற்றித் தரப்பட்டால் தகவல் தொழில்நுட்பப் பூங்காவினை அங்கு அமைக்க அனைத்து முயற்சிகளையும் எல்காட் நிறுவனம் மேற்கொள்ளும் என அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்தார். எனவே, மேற்கூறிய இடத்தைப் பொருத்தவரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் கருத்துரு எல்காட் நிறுவனத்தின் பரிசீலனையில் இல்லை. இதற்கான நடவடிக்கையினை அரசு எடுக்கும் பட்சத்தில், சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எல்காட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கடித எண் 3894/த.தொ.நு(ஆ–3)/2013–7, நாள் 2.8.2019)

குழுவின் குறிப்புரை
(6)

திருவண்ணாமலை கனந்தம்பூண்டி என்கிற இடத்தில் அமைந்துள்ள அரசு நிலத்தை நிலம் மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புகொண்ட நிலையில் துறையால் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு குழு தனது வருத்தத்தினை பதிவு செய்கிறது. எனவே மேற்படி இடத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராய குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

கி. சீனிவாசன்,
செயலாளர்.